1981 ஏப்ரல் 23]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணை ஒரு திரவ நைட்ரஜன் உற்பத்திக் கூடமும், ஈச்சங்கோட்டைப் பண்ணையில் ஒரு உறைவிந்து நிலையமும் ஆரம்பிக்கப்படுகின்றன.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடப்பு ஆண்டில் 1981—82-க்குள்ளாக தமிழகம் முழுவதும் உறைவிந்து நிலையங்களைப் படிப்படியாக துவக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையைப் பொறுத்துத் தான் அது பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

I—2. தகவல் கோரல்.

பல சிறு பிரச்னைகள் குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் எழுதிக் கேட்டு அதற்கு பிறகு அவையிலே கொண்டு வரலாமே தவிர ஒழுங்குப் பிரச்னையில் கொண்டு வரக்கூடாது. இதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்புவதற்கு தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். '' காலம் பொன் போன்றது '', காலத்தைக் காட்டக் கூடிய நமது கடிகாரம் சரியாக ஓடாமல் உயிர் ஊசலாடுகிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அதற்காக ஊசலாட வேண்டாம். '' ஓல்ட்டேஜ் ட்ராப் '', ஆகியிருக்கிறது. அது தான் காரணம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கேள்வி நேரத்தின் போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினேன். சரியாக பத்து மணியான உடனே கேள்விகளை பாதியிலே முடித்து, மீதியை அச்சடித்து தருவதாகக் கூறினீர்கள். இதனால் கேள்வி கேட்கின்ற வாய்ப்பினை இழந்து விடுகிறோம். துர்பாக்கியம், என்னுடைய கேள்விகள் அதிலே இருந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நாளைக்கு 20 கேள்விகள் எடுத்துக் கொள்கிறேன். நேற்று திட்டக்குழு பற்றி கேள்வி வந்தது. எல்லாக் கட்சிக்காரர்களும் கேள்வி கேட்க விரும்பினார்கள். நான் அதை மறுக்கவில்லை. அனுமதித்தேன். அதன் பிறகு குழப்பம் வந்தது. அதை சபையும் அனுபவித்தது. நானும் அனுபவித்தேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைகளை எந்த சூழ்நிலையிலே எடுத்துக் கொள்ள முடியவில்லை என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இன்னொரு நாளைக்கு தங்களின் வசதிப்படி எடுத்துக் கொள்வீர்களானால் முக்கியமான கேள்விகள் மீது துணைக்கேள்விகள் கேட்க வாய்ப்பு கிடைக்கும். ஏற்கனவே எப்போதாவது தான் கேள்விகள் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்குக் கூட உங்களுக்கு துணை வினா ஒன்றை அனுமதித்தேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். நாங்கள் உட்காருகிற சீட்டில் கையால் தொட்டாலே ''டஸ்ட்'', ஒட்டிக்கொள்கிறது. தூசி நிறைய இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுத்தமாக வைத்திருக்க வேண்டியது என்னுடைய கடமை. அதைக் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவிலிருந்து, இன்று சட்டமன்றத்திற்கு வருகிற வரையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தண்ணீர் வரவில்லை என்பது தானே, ஏற்கனவே அதுபற்றி சொல்லியாகிவிட்டது. நீங்கள் இப்போது தான் வந்திருக்கிறீர்கள். ''கரண்ட் ட்ராப்'' காரணமாக அது ஏற்பட்டிருக்கிறது. இதுநாள் வரைக்கும் இல்லாத நிலை இன்று தான் சட்டமன்ற விடுதியிலே ஏற்பட்டது. காலையில் $8\frac{1}{4}$ மணிக்கே அதுபற்றி விசாரித்தேன். காரணம் கேட்டேன். தொழிலாளர்கள், கரண்ட் வரவில்லை வோல்டேஜ் ட்ராப் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். மோட்டாருக்கு மூன்று பேஸ் கரண்ட் வேண்டும். உங்களுக்குத் தெரியும். தற்போது நிலைமை சரியாகிவிட்டது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்